**WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE INC.**

**வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்**

**Girraween Public School, Bando Road, Girraween, NSW 2145**

# தமிழ் அறிவுப்போட்டி 2011 – (ஆண்டு 5 – ஆண்டு 12)

தமிழ் அறிவுப் போட்டிகள் ஆண்டு 5 இலிருந்து உயர்தர வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கு நவம்பர் மாதம் 5ம் திகதியிலிருந்து 19ம் திகதி வரை நடாத்தப்படும். ஒவ்வொரு வகுப்பு மாணவர்களுக்கும் போட்டிகள் தனித்தனியாக நடைபெறும்.

இந்தவருடம் தமிழ் அறிவுப் போட்டிகள் மூன்று சுற்றுகளாக நடைபெறும். கால் இறுதிப்போட்டியிலிருந்து அரை இறுதிப்போட்டிக்கு 8 மாணவர்களும், அரை இறுதிப்போட்டியிலிருந்து இறுதிப்போட்டிக்கு 4 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள்.

ஒவ்வொரு வகுப்புக்கும் உரிய மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரப்பட்டுள்ளன. நீங்கள் wtsc.org.au என்னும் இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## போட்டிக்கான வினாக்கள்

1. வகுப்புக்களில் அல்லது பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்.
2. தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் தொடர்பான பொது அறிவு போன்ற விடயங்கள்.

## விதிமுறைகள்

### கால் இறுதிப்போட்டி

1. இப் போட்டிகள் நவம்பர் மாதம் 5ம் திகதி நடைபெறும்.
2. வகுப்பில் 8 மாணவர்களிலும் குறைவாக இருந்தால், அந்த வகுப்பு மாணவர்களுக்கு கால் இறுதிப்போட்டிகள் நடைபெறமாட்டாது. மாணவர்கள் நேரடியாக அரை இறுதிப்போட்டியில் பங்கெடுப்பார்கள்.
3. 15 வினாக்கள் அடங்கிய வினாத்தாள்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். 8 மாணவர்களை தெரிவுசெய்யும் பொழுது, மாணவர்கள் சமமான புள்ளிகளை பெறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மேலதிகமாக 5 வினாக்கள் கொடுக்கப்படும். மீண்டும் சமமான புள்ளிகளை பெற்றால் மேலும் 3 வினாக்கள் கொடுக்கப்படும்.
4. 30% வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 70% வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவு போன்ற விடயங்களிலிருந்தும்தெரிவு செய்யப்படும்.

**Postal Address:**
PO Box: 557
Wentworthville, NSW 2145

Email: info@wtsc.org.au
Web: http://www.wtsc.org.au

5. மூன்று அல்லது நான்கு விடைகளில் சரியான விடையைத் தெரிவு செய்ய வேண்டும். (Multiple choice questions).
6. சில வினாக்களுக்கு விடைகள் கொடுக்கப்படமாட்டாது. மாணவர்கள் சரியான விடையை எழுத வேண்டும். (Open Questions).
7. மாணவர்களுக்கு மொத்தமாக 15 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும்.
8. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்கள் கடமையாற்றுவார்கள்.

### அரை இறுதிப்போட்டி

1. இப் போட்டிகள் நவம்பர் மாதம் 12ம் திகதி 1:30 மணிக்கு ஆண்டு 5 இலிருந்து 8 வரையுள்ள வகுப்பு மாணவர்களுக்கும், நவம்பர் மாதம் 19ம் திகதி 1:30 மணிக்கு ஆண்டு 9/10 (Non HSC), ஆண்டு 9/10 (HSC) மற்றும் ஆண்டு 11/12 (HSC) வகுப்பு மாணவர்களுக்கும் நடைபெறும்.
2. இப்போட்டி வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும்.
3. கால் இறுதிப்போட்டியில் 1ம், 3ம், 5ம், 7ம் இடங்களை பெற்ற மாணவர்கள் ஒரு குழுவிலும், 2ம், 4ம், 6ம், 8ம் இடங்களை பெற்ற மாணவர்கள் அடுத்த குழுவிலும் தெரிவு செய்யப்படுவார்கள்.
4. இரண்டு குழு மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான வினாக்கள் கேட்கப்படும். ஒரு குழு பங்குபற்றும்போது போட்டியில் பங்குபற்றாத மற்றய குழுவினர் மண்டபத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
5. மாணவர்கள் சமமான புள்ளிகளை பெறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மேலதிகமாக 5 வினாக்கள் கொடுக்கப்படும். மீண்டும் சமமான புள்ளிகளை பெற்றால் மேலும் 3 வினாக்கள் கொடுக்கப்படும்.
6. ஒவ்வொரு குழுவிலும் அதிகூடிய புள்ளிகளை பெறும் இரண்டு மாணவர்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார்கள்.
7. போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும் போது முதலில் மணியை (Buzzer) அழுத்துபவருக்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
8. சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும்.
9. முதல் மாணவர் தவறாக பதிலளித்தால், மற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
10. மாணவர்கள் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும்.
11. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.

12. வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவு போன்ற விடயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
13. ஒவ்வொரு வினாவிற்கும் 40 வினாடிகள் கொடுக்கப்படும்.

## இறுதிப்போட்டி

1. இப் போட்டிகள் நவம்பர் மாதம் 12ம் திகதி ஆண்டு 5 இலிருந்து 8 வகுப்பு வரையுள்ள மாணவர்களுக்கும், நவம்பர் மாதம் 19ம் திகதி ஆண்டு 9/10 (Non HSC), ஆண்டு 9/10 (HSC) மற்றும் ஆண்டு 11/12 (HSC) வகுப்பு மாணவர்களுக்கும் நடைபெறும்.
2. இப்போட்டி வினா விடைப் போட்டியாக (Quiz) நடைபெறும்.
3. அரை இறுதிப்போட்டியில் தெரிவு செய்யப்பட்ட நான்கு மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றுவார்கள்.
4. மாணவர்கள் சமமான புள்ளிகளை பெறும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு மேலும் 5 வினாக்கள் கொடுக்கப்படும். மீண்டும் சமமான புள்ளிகளை பெற்றால் மேலும் 3 வினாக்கள் கொடுக்கப்படும்.
5. போட்டிக்கான வினாக்கள் திரையில் காண்பிக்கப்படும் போது முதலில் மணியை (Bazar) அழுத்துபவருக்கு முதல் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
6. சரியாக பதிலளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். தவறாக பதிலளித்தால் 2 புள்ளிகள் கழிக்கப்படும்.
7. முதல் மாணவர் தவறாக பதிலளித்தால், மற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். சரியாக பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும், தவறாக பதில் கூறினால் புள்ளிகள் கழிக்கப்படமாட்டாது.
8. மாணவர்கள் பதிலளிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் மட்டுமே வழங்கப்படும்.
9. 15 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
10. வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும், தமிழ் மொழி, கலாசாரம், வரலாறு மற்றும் தமிழ் பொது அறிவு போன்ற விடயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
11. ஒவ்வொரு வினாவிற்கும் 40 வினாடிகள் கொடுக்கப்படும்.

## பரிசில்கள்

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.